# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

FRANCE TEDC -FRANCE

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

FRANCE TEDC -FRANCE

## 2024

## வளர்தமிழ் 10

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

FRANCE TEDC -FRANCE
FRANCE TEDC -FRANCE

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. வடதிசை மன்னரின் செருக்கை அடக்கிய சேர மன்னன்

அ) செங்குட்டுவன் ☐ ஆ) இளங்கோ ☐

இ) கரிகாற்சோழன் ☐ ஈ) நரசிம்மபல்லவன் ☐

2. சொல்லின் முதலில் வராத வினா எழுத்துகள்

FRANCE TEDC -FRANCE

அ) எ,யா ☐ ஆ) ஏ,யா ☐

இ) ஆ,ஏ ☐ ஈ) ஆ,ஓ ☐

3. குமரிக்கண்டத்தின் அழிவு பற்றிக் கூறும் நூல்களில் ஒன்று

அ) திருக்குறள் ☐ ஆ) மூதுரை ☐

இ) தொல்காப்பியம் ☐ ஈ) நல்வழி ☐

4. பகிர்ந்து உண்ணல் என்ற கருத்தை விளக்கும் சொல்

அ) ஓம்பல் ☐ ஆ) பாத்தூண் ☐

இ) நல்லாறு ☐ ஈ) நோன்பு ☐

FRANCE TEDC -FRANCE

5. யாழ்குடா மக்கள் ஒரே நாளில் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்த ஆண்டு

அ) 2009 ☐ ஆ) 1983 ☐

இ) 1995 ☐ ஈ) 1977 ☐

6. சிறுவர்கள் நன்றாக வரைந்தனர். இச்சொல்லியத்தின் தோன்றா உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) செயப்படுபொருள் ☐

இ) அடைமொழி ☐ ஈ) பயனிலை ☐

7. எழுவாய் ஒரு செயலை, பிறரைக் கொண்டு செய்வித்தலைக் குறிக்கும் வினை

அ) தன்வினை ☐ ஆ) குறிப்புவினை ☐

இ) பிறவினை ☐ ஈ) செய்வினை ☐

8. **குறள்:**

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் ________

அ) தலை ☐ ஆ) வழி ☐

FRANCE TEDC -FRANCE

இ) துணை ☐ ஈ) முறை ☐

9. மருதநிலத்தில் ஆடலுக்கான முழவுகளாக முழங்கியவை

அ) முகில்கள் ☐ ஆ) வண்டுகள் ☐

இ) யானைகள் ☐ ஈ) தும்பிகள் ☐

10. கடலால் கொள்ளப்பட்ட முதற்கழகம் ________ அமைந்திருந்தது.

அ) தஞ்சாவூரில் ☐ ஆ) தென்மதுரையில் ☐

இ) தகடூரில் ☐ ஈ) வெள்ளூரில் ☐

11. தன்மை, முன்னிலை,படர்க்கை என்பன

FRANCE TEDC -FRANCE

அ) முந்நீர் ☐ ஆ) முக்காலம் ☐

இ) முத்தமிழ் ☐ ஈ) மூவிடம் ☐

12. தேவநேயப்பாவாணரது இயற்பெயர்

அ) தேவநேசன் ☐ ஆ) வரதன் ☐

இ) மயில்வாகனன் ☐ ஈ) இளங்கோ ☐

13. பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி என்ற அடி________ பற்றிய பாடலாகும்.

அ) கடற்கோள் ☐ ஆ) நடுகல் ☐

இ) காவிரி ☐ ஈ) மொழி ☐

14. வில்லுப்பாட்டுக் குழுவில் வில்லடித்துப் பாடுபவர்

அ) பாணர் ☐ ஆ) விறலியர் ☐
இ) அண்ணாவியார் ☐ ஈ ) பாடினி ☐

15. வ் என்னும் உடம்படுமெய் தோன்றும் புணர்ச்சி

அ) என்னே + அழகு ☐ ஆ) பனை + அடி ☐
இ) கை + ஏடு ☐ ஈ ) பல + உணவு ☐

FRANCE TEDC -FRANCE

16. சென்ற ஆண்டு மாரி நன்றாக விளைந்தது. இது

அ) இடவாகுபெயர் ☐ ஆ) தொழிலாகுபெயர் ☐
இ) காலவாகுபெயர் ☐ ஈ ) சினையாகுபெயர் ☐

17. பழந்தமிழர் கடற்கோள் நிகழப்போவதை முன்கூட்டியே உணர்ந்தனர். ________

அவர்கள் அரணான இடம் நோக்கி நகர்ந்தனர்.

அ) ஏனென்றால் ☐ ஆ) அதனால் ☐
இ) ஆனால் ☐ ஈ ) ஏனெனில் ☐

FRANCE TEDC -FRANCE

18. யானை செலுத்துபவன்

அ) வலவன் ☐ ஆ) பாகன் ☐
இ) இடையன் ☐ ஈ ) மீகான் ☐

19. பின்வருவனவற்றுள் எதிர்மறைப் பெயரெச்சம்

அ) படித்த ☐ ஆ) படித்து ☐
இ) படியாத ☐ ஈ ) படிக்கும் ☐

20. ஆண்டான் என்பதன் வினையடி

அ) ஆண் ☐ ஆ) ஆள் ☐

இ) ஆண்ட ☐ ஈ ) ஆன் ☐

21. இலங்கைத்தீவு ஆங்கிலேயர் மேலாண்மையிலிருந்து விடுதலை பெற்ற ஆண்டு

அ) 1947 ☐ ஆ) 1972 ☐

இ) 1944 ☐ ஈ ) 1948 ☐

FRANCE TEDC -FRANCE

22. நடுகல் எடுப்பதற்கான ஆறு நிலைகள் பற்றிக் குறிப்பிடுபவர்

அ) ஔவையார் ☐ ஆ) கபிலர் ☐

இ) பாரதியார் ☐ ஈ ) தொல்காப்பியர் ☐

23. பார்க்குமிடம் எங்கும் நீக்கமறப் பேரெழில்களால் இவ்வுலகம்

அ) நிறைந்திருக்கின்றது ☐ ஆ) தோன்றுகின்றன ☐

இ) மறைந்திருக்கின்றன ☐ ஈ ) நிறைந்திருக்கின்றன ☐

24. பாரியின் மழைக்கையின் சிறப்புப் பற்றிக் கபிலர் தனது பாடலில்

FRANCE TEDC -FRANCE

கூறியுள்ளார். இங்கு வந்துள்ள உவமையணி

அ) கபிலர் ☐ ஆ) மழைக்கை ☐

இ) சிறப்பு ☐ ஈ ) பாடல் ☐

25. பன்னாட்டுத் தாய்மொழிகள் நாளாக ஒன்றிய நாடுகள் அவையால் அறிவிக்கப்பட்ட நாள்

அ) மார்ச் 21 ☐ ஆ) பெப்ரவரி 21 ☐

இ) யூன் 21 ☐ ஈ ) ஏப்பிரல் 21 ☐

26. நான் பள்ளிக்குச் சென்று பாடம் படித்தேன். இச் சொல்லியம்

அ) வினாச்சொல்லியம் ☐ ஆ) கலப்புச்சொல்லியம் ☐

இ) கூட்டுச்சொல்லியம் ☐ ஈ ) தனிச்சொல்லியம் ☐

27. பார்ப்பு என்பதன் பொருள்

அ) சிலை ☐ ஆ) பேரரசு ☐

இ) அழகு ☐ ஈ ) குஞ்சு ☐

FRANCE TEDC -FRANCE

28. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அதே சொல் பிரிந்து தொடர்மொழியாக நிற்கும் பொழுது வேறு ஒரு பொருளையும் தருவது

அ) தனிமொழி ☐ ஆ) பொதுமொழி ☐

இ) தொடர்மொழி ☐ ஈ ) இணைமொழி ☐

29. தாத்தா நாற்காலியில் அமர்ந்திருந்து செய்தித்தாள் வாசிக்கின்றார். இதில் நாற்காலி என்பது

அ) காரணஇடுகுறிப்பெயர் ☐ ஆ) இடுகுறிப்பெயர் ☐

இ) காலப்பெயர் ☐ ஈ ) இடுகுறிப்பொதுப்பெயர் ☐

FRANCE TEDC -FRANCE

30. வினையெச்ச விகுதிகள்

அ) அ,இ,உ ☐ ஆ) இ,உ,ய் ☐

இ) க,இ,ய ☐ ஈ ) எ,அ,ய் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

உலகில் வேறெங்கும் காண இயலாத தமிழர்களின் உயரிய வாழ்வியல் பண்புகளில் ஒன்றாக விளங்குவது விருந்தோம்பல். விருந்தினர் முகம் மலர்வதைக் கண்டு தமிழர் அகமகிழ்ந்தனர். ஏழ்மையிலும் கூட ஒரு பகுதி கூலத்தைப் பயன்படுத்தாமல் பாதுகாத்துவைத்து வீட்டுக்கு வரும் வழிப்போக்கர்களுக்கு விருந்து படைத்திடும் நற்பண்பு கொண்ட இனம் நமது தமிழினம். வறுமை வாட்டினாலும் ‘‘பகுத்துண்டு வாழ்வதே வாழ்வு’’ என வாழ்வதால் தமிழரின் வாழ்வியல் முறை உலகின் சிறந்த வாழ்வியலாகத் திகழ்கின்றது.‘‘மருந்தே ஆயினும் விருந்தோடுண்’’ என்கிறார் ஔவையார். திருக்குறளில் விருந்தோம்பலுக்கென்று ஒரு அதிகாரமே உள்ளது. இவை தமிழர் வாழ்வில் விருந்தோம்பலின் அகத்தியத்தை உணர்த்துகின்றன. உறவினர்களுக்கு உணவு கொடுத்து அவர்களைப் பாதுகாத்தல் சுற்றம் ஓம்பலாகும். பழந்தமிழர்களின் மரபுகளில் விருந்திட்டுச் சுற்றம் ஓம்புதல் குறிப்பிடத் தகுந்த வழக்கமாகும். மேலும் வீட்டுக்கு முன்நின்று காகம் கரைவதை விருந்தினர் வருகையைத் தெரிவிக்கும் அறிகுறியாகத் தமிழர்கள் கருதியுள்ளனர். திருவிழா நடைபெறும் நாட்களில் உணவு சமைத்து சுற்றத்தாருக்கும், புதிதாக விழாப் பார்க்க வரும் விருந்தினருக்கும் உணவு கொடுத்து மகிழ்வர். இலக்கியம் கூறும் இந்த மரபு இன்றும் தொடர்கிறது.

FRANCE TEDC -FRANCE
FRANCE TEDC -FRANCE

1. ஏன் தமிழரின் வாழ்வியல்முறை உலகின் சிறந்த வாழ்வியலாகத் திகழ்கின்றது?

2. தமிழரின் உயரிய வாழ்வியல் பண்புகளில் ஒன்றாக விளங்குவது எது?

FRANCE TEDC -FRANCE

3. ''மருந்தே ஆயினும் விருந்தோடுண்'' என்ற பாடலைப் பாடியவர் யார்?

4. சுற்றம் ஓம்பல் என்றால் என்ன?

5. விருந்தினர் வருகையைத் தெரிவிக்கும் அறிகுறியாக தமிழர் எதைக் கருதியுள்ளனர்?

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. கரும்புத் தோட்டக் கூலிகளாகத் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் இரண்டைத் தருக.

_______________________________________________

2. குமரிக்கண்ட மாந்தனின் நனிமிகு புலனாட்சியை இலக்கியங்கள் எவ்வாறு பேசுகின்றன?

_______________________________________________

FRANCE TEDC -FRANCE

3. இந்தியத்திடம் நீதி கேட்டு உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தோர் யாவர்?

_______________________________________________

4. பெருவங்கியம் என அழைக்கப்படும் இசைக்கருவி எது?

_______________________________________________

5. “வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலை” என்ற பாடல் இடம்பெற்ற நூல் எது?

_______________________________________________

FRANCE TEDC -FRANCE

6. இலங்கை அரசு சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தைக் கொண்டுவந்த ஆண்டு எது?

_______________________________________________

7. வில்லுப்பாட்டுக் கலையை தமிழகமெங்கும் பரப்பியவர் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

**4. பின்வரும் கவிதைத் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. உழவர்

2. தமிழீழம்

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 10

**5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

அதிகாலைப்பொழுது பொலபொல என விடிகின்றது. பறவைகள் கூட்டங்கூட்டமாக வானில் பறந்து செல்கின்றன. துயில் எழுந்த காகங்கள் அருகிலுள்ள குளத்தில் நீராடுகின்றன. இவற்றைக் கண்டு கழித்தவாறு அப்பாவும் எழிலனும் தோட்டத்திற்குச் செல்கின்றனர். அங்கே இருவரும் முற்றாத வெண்டைக்காய்களைப் பறித்துக் கடகத்துக்குள் போடுகின்றனர். பள்ளிக்கு நேரமாகிவிட்டது நீ வீட்டுக்குச் செல் என்று அப்பா கூறினார். அவர் கடகத்தை தலையில் சுமந்து கொண்டு சந்தைக்குச் செல்லத் தொடங்கினார். சந்தையில் மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது.

FRANCE TEDC -FRANCE

1. கலப்புச்சொல்லியம் ஒன்று தருக.

_______________________________________________

2. எதிர்மறைப் பெயரெச்சத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

3. சுட்டுப்பெயர் ஒன்று தருக.

_______________________________________________

4. காலப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

FRANCE TEDC -FRANCE

_______________________________________________

5. நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற சொற்கள் இரண்டைத் தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. தரப்பட்டுள்ள வினைச் சொற்களின் பகுதி, இடைநிலை என்பவற்றைத் தருக.**

| | பகுதி | இடைநிலை |
|---|---|---|
| கண்டான் | | |
| நிற்கின்றன | | |
| எழுதுவாள் | | |

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 03

**2. தரப்பட்டுள்ள சொல்லியங்கள் எவ்வகை ஆகுபெயர்கள் என்பதைக் கண்டறிந்து எழுதுக.**

1. உழவர் தோட்டத்தில் வெற்றிலை நட்டனர்.

_______________________________

FRANCE TEDC -FRANCE

2. குயிலி வெள்ளை அணிந்து பள்ளிக்குச் சென்றாள்.

_______________________________

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

குஞ்சு
சிலையில்
கொடியும்
நஞ்சும்
அடிமேல்
அம்மியும்
திரண்டால்
கல்வி
இளமையிற்
கோழி
அடம்பன்
மிதிக்கு
நகரும்
நுனிநாக்கில்
அடிஅடித்தால்
எழுத்து
அடிநாக்கில்
மிதித்து
சாகுமா
அமிழ்தமும்

FRANCE TEDC -FRANCE

1. விடா முயற்சி.

2. பருவத்திலே பயிர் செய்.

FRANCE TEDC -FRANCE

3. தாய்மையின் கவனம்.

4. வஞ்சகப் பேச்சு.

5. ஒற்றுமையே வலிமை தரும்.

புள்ளிகள் 05

7) **பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**நாம் உண்ணும் உணவுகள், சிற்றுண்டிகள் எமது உடலுக்கு ஏற்றதாய் இருக்க வேண்டும். எம்மில் பலர் சுவையான உணவுகளையே விரும்பி உண்கின்றனர். அதனால் அவர்கள் நோய்வாய்ப்படுகின்றனர். நாம் உண்ட உணவு உடலுக்கு ஏற்றதல்ல என்பதை உணர்ந்தால் அவ்வுணவைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் நோய் இன்றி வாழலாம்.**

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- சேரமான் வஞ்சினம்
- வில்லுப்பாட்டு
- தைப்பொங்கல்
- சூழல் மாசடைதல்

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 15

FRANCE TEDC -FRANCE